தஞ்சையில் "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு!

# கடலூர் கிழக்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை!

*கடலூர், ஜன. 25-*

*தஞ்சையில் "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு நாளை (26.01.2026 திங்கட்கிழமை) மாலை 03.00 மணியளவில் தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டியில் நடைபெறும் மாநாட்டில், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி - மாவட்ட- மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணியினர் மாநாட்டில் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்*



*விடுத்துள்ளார்.*

*அவரது அறிக்கை வருமாறு:-*

*தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திமுக நாடாளுமன்றக் குழு தலைவர், கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்களின் தலைமையில், நாளை (26.01.2026திங்கட்கிழமை), மாலை 03.00 மணியளவில், தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டியில், "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" திமுக டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு நடைபெற உள்ளது.*

*அது சமயம் இம்மாநாட்டில் மாவட்ட கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகர , ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட - மாநகர- நகர - பகுதி - பேரூர் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக மகளிர் துணை செயலாளர்கள், முன்னாள் இந்நாள் மகளிர் உள்ளாட்சி பிரதிநிதிகள், மகளிர் மாநகர மேயர், பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள், மண்டல குழு தலைவர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற மகளிர் உறுப்பினர்கள், முன்னாள் ஒன்றிய குழு தலைவர்கள், துணை தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள், மாவட்ட ஒன்றிய குழு உறுப்பினர்கள் மற்றும் கழக மகளிர் அணியினர், மகளிர் தொண்டர் அணியினர், மகளிர் அணி உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

# தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் திருமதி.பி.கீதாஜீவன் அறிவிப்பு!



தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் G.செல்வராஜ், தலைமையில் நாளை (26.01.2026 - திங்கள்கிழமை) மாலை 6.00 மணியளவில் கலைஞர் அரங்கம், தூத்துக்குடியில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள பொருள் குறித்து விவாதிக்கப் பட உள்ளது. எனவே தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, மற்றும் பேரூர் செயலாளர்கள், தலைமைச்செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், தலைமை கழக நிர்வாகிகள் மற்றும் மாநில அணிகளின் துணை செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

பொருள் : 1. பிப்ரவரி 1 முதல் மார்ச் 8 வரை ஒவ்வொரு வாக்குச்சாவடி தோறும் தேர்வு செய்யப்படும் மகளிரை கொண்டு அரசின் சாதனைகளை பரப்புரை செய்தல்.

2. பிப்ரவரி 1 முதல் 28 வரை சட்டபேரவை தொகுதி வாரியாக தெருமுனை கூட்டங்கள் நடத்துவது

3. பிப்ரவரி 21 அன்று மதுரையில் BLA2, BLC மற்றும் BDA ஆகியோர் பங்குபெறும் பயிற்சி மாநாட்டில் கலந்து கொள்வது.

4. மார்ச் 8 அன்று திருச்சியில் நடைபெற உள்ள கழக மாநில மாநாட்டில் கலந்துகொள்வது மற்றும் கழக ஆக்கப்பணிகள்

**திருமதி.பி.கீதாஜீவன்**

மாவட்டச் செயலாளர் – தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர்

திருவாரூரில்

# மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா – பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவாரூர்,ஜன.25–

திருவாரூரில் மொழிப்போர்த் தியாகிகளை பெருமைப்படுத்தி வீரவணக்கம் செய்யும் வகையில், ஆண்டுதோறும் நடைபெறும் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் இன்று (25.01.2026 ஞாயிறு) திருவாரூர் கீழவீதி மொழிப்போர் தளகர்த்தர் எல்.ஜி அரங்கில் நடைபெறுகிறது. இதுகுறித்து மாவட்ட செயலாளர் தமது அறிக்கையில் தெரிவித்து இருப்பதாவது,

தமிழ்மொழியின் பெருமையை செம்மொழியாக்கி, உலக அரங்கில் ஓங்கி ஒலிக்கசெய்த ஒப்பாரும் மிக்காருமில்லா ஒப்பற்ற தலைவர் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மாவட்டமாகவும், தமிழ்மொழியின் பெருமை அழிக்க வந்த இந்தி மொழியை விரட்ட மாநிலம் முழுவதும் நடைபெற்ற போராட்டங்களில், தங்கள் இன்னுயிரை தீயின் கோர நாக்குகளுக்கு தந்த இந்தி எதிர்ப்பு போராட்ட தியாகிகளின் வரிசையில் மருதுவாஞ்சேரி சாரங்கபாணியை தந்த மாவட்டமாகவும் திகழும் திருவாரூர் மாவட்டத்தில், மொழிப்போர்த் தியாகிகளின் நினைவை போற்றும் வகையில் ,மொழிப்போர் தியாகிகளுக்கான வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நாளது இன்று (25.01.2026 – ஞாயிறு) திருவாரூர் கீழ வீதியில் அமைக்கப்பட்டுள்ள "மொழிப்போர் தளகர்த்தர் எல்.ஜி அரங்கில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் சா.பகலவன் தலைமையில் நடைபெறுகிறது.

தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்டக் கழக செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., ஆகியோர் முன்னிலை ஏற்கும் இந்த பொதுக்கூட்டத்திற்கு நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ் வரவேற்புரையாற்றுகிறார். முன்னாள் அமைச்சர் மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் உ.மதிவாணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அ.அசோகன் மற்றும் கழக இளம் பேச்சாளர் தி.தினேஷ் பாபு சிறப்புரை யாற்றுகின்றனர். மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் மதி.நெல்சன் மண்டேலா நன்றி கூறுகிறார்.

தமிழ் மொழிக்காகவும், தமிழ் நாட்டிற்காகவும், தமிழ் மக்களுக்காகவும் அனுதினம் உழைத்து நல்ல பல திட்டங்களை தந்து இந்திய அளவில் தமிழ்நாட்டை உயர்த்திக்கொண்டிருக்கும் நமது முதல்வர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் , துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரது வழிகாட்டுதல்களின்படி மொழிப்போர் தியாகிகளை பெருமைப்படுத்தும் இந்த கூட்டத்திற்கு, கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், சமூக ஆர்வலர்கள், தமிழ் பற்றாளர்கள் என அனைத்துத் தரப்பு மக்களும் பங்கேற்று மொழிப்போர் தியாகிகளுக்கு பெருமை சேர்க்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.கழக மாணவர் அணி சார்பில்


# "மொழிப்போர் தியாகிகளுக்கான வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!"

## வழக்கறிஞர்.ஆடுதுறை மு.உத்திராபதி, சென்னை அரங்கநாதன் வீரவணக்க உரை ஆற்றுகிறார்கள்!

## தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர்.பெ.பழனியப்பன் அறிக்கை!

*தருமபுரி,ஜன.25-*

*கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.கழக மாணவர் அணி சார்பில் "மொழிப்போர் தியாகிகளுக்கான வீரவணக்க நாள் பொதுக் கூட்டம்" இன்று (25.01.2026 ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.00 மணியளவில், கிருஷ்ணா புரத்தில் மா.சந்தர் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தலைமையிலும், Dr.M.பிரபு ராஜசேகர், தருமபுரி தெற்கு ஒன்றிய கழக செயலாளர், கே.பி. சக்திவேல், தருமபுரி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர், திரு. என்.ஏ.மாது தருமபுரி*



*வடக்கு ஒன்றிய கழக செயலாளர், சதா சுர்ஜித், ஆர்.சி.பிரபு மற்றும் செல்வி. ஆர். புனிதா மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் ஆகியோர் முன்னிலையிலும் இப்பொதுக்கூட்டம் நடைபெறும்.*

*இக்கூட்டத்தில் வழக்கறிஞர்.ஆடுதுறை மு.உத்திராபதி, மாநில இலக்கிய அணி துணை செயலாளர், லால்குடி சட்டமன்ற தொகுதி பார்வையாளர், வழக்கறிஞர்.ஆ.மணி., MP, தருமபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர், சென்னை அரங்கநாதன், தலைமை கழக பேச்சாளர், திரு.கொ.இரமேஷ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர் ஆகியோர் வீரவணக்க உரை ஆற்றுகின்றனர்.*

*அதுசமயம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், மாவட்ட, ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்கள் (BDA), வாக்குச்சாவடி நிலை குழு உறுப்பினர்கள் (BLC), கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழக தொண்டர்கள், கழக மூத்த முன்னோடிகள், மாணவர் மன்ற நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்துகொண்டு வீரவணக்கம் செலுத்த கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

அன்னியூர் சிவா எம்.எல்.ஏ. சிறப்புரை! எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# பெரம்பலூர் மாவட்ட மாணவரணி சார்பில் வீர வணக்க நாள் பொதுக்கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் – மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல் அறிக்கை!

பெரம்பலூர்,ஜன,25–


பெரம்பலூர் மாவட்ட மாணவரணி சார்பில் வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இதில் மாநில விவசாய அணி செயலாளர் அன்னியூர் சிவா.எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகிறார்.

மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் , எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர். இது குறித்து பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் – மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

மேனாள் ஒன்றிய அமைச்சர் – கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., வழிகாட்டுதல்படி,

போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்



கர் ஆலோசனைக்கிணங்க, மொழிப்போர்த் தியாகிகளை போற்றிடும் வகையில், பெரம்பலூர் மாவட்ட மாணவர் அணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகள் வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் இன்று (25.01.2026, ஞாயிற்றுக் கிழமை) மாலை 6.00 மணியளவில், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல் தலைமையில், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கிருஷ்ணா. இள. வரவேற்புரையில்,

பெரம்பலூர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் (எனது) முன்னிலையில், பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்தில் நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் மாநில விவசாய அணி செயலாளர் அன்னியூர் சிவா.எம்.எல்.ஏ.,

மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைத்தலைவர் நடிகர் போஸ்.வெங்கட், எம்.பிரபாகரன். எம்.எல்.ஏ., கொள்கை பரப்பு துணைச் செயலாளர் சேர்க்காடு கென்னடி, தலைமைக் கழக இளம் பேச்சாளர் நா.காருண்யா, ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகின்றனர். இதில் பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க. சித்தார்த்தன், குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே. அருண் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் அ.இளையராஜா நன்றியுரையாற்றுகிறார். இந்த கூட்டத்தில் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள்,பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய,நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அனைத்து அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், வார்டு ,கிளை கழக செயலாளர்கள், கழக பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்று பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் – மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல் இருவரும் தங்களது அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளனர்.

"வெல்லும் தமிழ்ப் பெண்கள் மாநாடு"

# திருவாரூர் மாவட்டத்திலிருந்து பெருந்திரளான பெண்கள் பங்கேற்கின்றனர்!

## மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருவாரூர்,ஜன–25.

தஞ்சையில் 26.01.2026. அன்று நடைபெறும் வெல்லும் தமிழ்ப் பெண்கள் டெல்டாமண்டல மாநாட்டில் திருவாரூர் மாவட்டத்திலிருந்து பல்லாயிரக்கணக்கான பெண்கள் பங்கேற்க அழைப்புவிடுத்து மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ.தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது,

தமிழ்நாட்டின் முதலமைச்சர் திராவிடநாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது தலைமையிலான பொற்கால ஆட்சியில் ,இந்தியாவே வியந்து போற்றும் அளவுக்கு மற்ற மாநிலங்களைவிட முன்னேற்ற பாதையில் தமிழ்நாட்டை கொண்டு செல்கிறார். நாடும் வீடும் முன்னேற்ற பாதையில் செல்லவேண்டுமானால் பெண்கள் கல்வியிலும், பொருளாதாரத்திலும் உயர்ந்து



மகிழ்வோடு இருக்க வேண்டும் என்பதை உணர்ந்து பெண்களுக்காக பல உன்னத திட்டங்களை நிறைவேற்றி முதல்வர் செயல்படுத்திவருகிறார்.

குறிப்பாக மகளிர் சுய உதவி குழுக்கள், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, கட்டணமில்லா விடியல் பேருந்து பயணம்,தோழி விடுதி, புதுமைப்பெண் திட்டம், குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டம், உள்ளாட்சி அமைப்புக்களில் இட ஒதுக்கீடு உள்ளிட்ட திட்டங்கள் ஒவ்வொன்றும் பெண்களின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்தி உள்ளது.

இப்படி தங்கள் வாழ்வின் தரத்தை உயர்த்தி, யாரையும் எதிர்பார்க்காமல் வாழ்க்கையை நடத்த உதவிய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, தங்கள் வாழ்வின் ஒளியேற்றியவராகவே பெண்கள் பார்க்கின்றனர். அதனால் எதிர்வரும் 2016ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலிலும்"முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான ஆட்சியே தொடர வேண்டும் என முடிவெடுத்து இருப்பது தெளிவாக உறுதிப்படுத்தி இருக்கிறது.


சந்தர்ப்பவாத அரசியல் செய்யும் அரசியல் இயக்கங்கள், மதவாத பிரிவினைவாத சக்திகளை தூண்டி வன்முறைகளை தூண்டும் பாசிச சக்திகள், தனது கட்சியை சேர்ந்தவர்கள் நசுங்கி இறந்தபோதும் அங்கிருந்து ஓடிய அரசியல் இயக்கம், பதவிக்காக காலில்விழுந்து பதவிகிடைத்ததும் கழுத்தைப்பிடித்த அரசியல் இயக்கங்கள் என தமிழ்நாட்டின் கபட அரசியல்வாதிகளின் ஒப்பனை முகங்களை கண்டு வெறுத்து, தமிழ்நாட்டின் வளர்ச்சி, முன்னேற்றம், பாதுகாப்பு என அனைத்திலும் நாட்டை முன்னோக்கி இட்டுச்செல்லும் கழகதலைவர் தலைமையிலான ஆட்சியை பாராட்டி அதுதான் தொடர வேண்டும் என விரும்புகின்றனர்.

எனவேதான் அனைத்து பெண்களும் தன்னெழுச்சியாகவே பெருந்திரளாக இந்த வெல்லும் தமிழ் பெண்கள் டெல்டா மண்டல மாநாட்டில் விரும்பி பங்கேற்க முன்வரும் நிலையில், கழக நிர்வாகிகள் அவர்களை பங்கேற்கும் விதமாக 26.01.2026. அன்று அனைத்து ஏற்பாடுகளையும் செய்து தரவேண்டும் எனவும், அனைத்து தரப்பு பெண்களும் பங்கேற்று சிறப்பிக்க வேண்டும் எனவும் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# 61 வது நினைவு தினம்

தோற்றம்
27.12.1931



மறைவு
27.01.1965

விருகம்பாக்கம்

# ஒய்.அரங்கநாதன்

1965 ஆம் ஆண்டு மொழிப்போர் உயிர்த் தியாகி

*என்றென்றும் நீங்காத நினைவுகளுடன்...*

**அர.அமுதவாணன்**

**திருமதி. மஞ்சுளாதேவி அமுதவாணன்**

**அர.அன்பழகன்**

**திருமதி. மாலதி அன்பழகன்**

**அர. இரவிச்சந்திரன்.B.A.B.L.,**

**திருமதி. மாலதி இரவிச்சந்திரன் B.Sc.,**

................பேரப்பிள்ளைகள்................

அ.அகல்யாவினோத்குமார்.B.E., அ.தேனருவிராஜாபிரதீப்.B.E.M.BA.,

அ.அன்பரசன்.B.Sc., அ.கோமதி.M.B.B.S., இர.பூங்குழலி.M.B.B.S.,

**அர.அ.எழில்வாணன்**

தி.மு.க. மாவட்டப் பிரதிநிதி

சென்னை தெற்கு மாவட்டம் கலைஞர்நகர் வடக்கு பகுதி